TNED060001512015

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2026-ம் வருடம் மார்ச் மாதம்-10-ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**(2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் 26-ம் நாள்)**

**அசல் வழக்கு எண். 149/2015**

**CNR No.TNED060001512015**

1. R.கலைவாணி
2. R.கௌசல்யா ........வாதிகள்

**// எதிர் //**

1. A.வேலப்பமுதலியார் (இறப்பு)
2. தனலட்சுமி
3. சாமிநாதன்
4. ரங்கநாதன்

(Amended as per order in I.A.1167/2017, dated 16.11.2017) ........பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 04.03.2026-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.S.செந்தில்நாதன், அவர்கள் ஆஜராகியும், 3-ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் Miss.S.R.ஜெயந்திகிருஷ்ணா, அவர்கள் ஆஜராகியும், 2, 4-ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.R.திருக்குமரன், அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி காலமாகிவிட்டதாலும், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் சமாதான மனு தாக்கல் செய்து, அம்மனு 04.03.2026-ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.,



SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 13:36:20 +0530

## 1. தீர்ப்புரை

அசல் வழக்கானது கடந்த 10.02.2015-ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் ஆவண எண்.652/2015 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யக் கோரியும், தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதி விற்பனையோ, வில்லங்கமோ செய்யாதிருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும் மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:**

வாதிகள், பிரதிவாதியின் மகன் வழிப் பேத்திகள். தாவா சொத்தானது புளியம்பட்டி சார்பதிவக பாகசாசன ஆவண எண்.801/1996-ன் படி -பி- ஷெட்யூல் சொத்தாக 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகும். பின்னிட்டு, கடந்த 14.05.2014 -ம் தேதிய தானசெட்டில்மெண்ட் படி வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். வாதிகள் தாவா சொத்தின் வருவாய்துறை ஆவணங்களில் மாற்றம் செய்து, வரி வகையறாக்களை செலுத்தி அனுபவித்து வருகிறார்கள். வாதிகள் கடந்த 28.05.2015-ல் கடன் பெறுவதற்காக, தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கச் சான்றிதழ் எடுத்துப் பார்த்தபோது, 1-ம் பிரதிவாதி வாதிகளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது தெரியவந்தது. தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1-ம் பிரதிவாதி கடந்த 10.02.2015-ல் வாதிகளுக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய, ரத்து பத்திரம் ஏற்படுத்தியுள்ளார். மேலும், தாவா சொத்தை 3-ம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருகிறார். எனவே, கடந்த 10.02.2015-ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் ஆவண எண்.652/2015 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யக்


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:36:36 +0530

கோரியும், தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதி விற்பனையோ, வில்லங்கமோ செய்யாதிருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

தாவா பொய்யானதும், மோசடியானதும் ஆகும். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் வாதிகள் 500 தென்னங்கன்றுகள் வைப்பதற்கு விவசாய கடன் வாங்குவதற்கு, பிரதிவாதியிடமிருந்த பத்திரம் எழுதி அதை ரிஜிஸ்டர் வாங்கதான் வாதிகள் கேட்கிறார்கள் என, பேத்திகள் தானே என நம்பி சம்மதம் தெரிவித்து பத்திரத்தில் கையொப்பம் செய்து, பதிவு செய்து கொடுத்தார். தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள வாசகங்களை 1-ம் பிரதிவாதிக்கு படித்துக்காட்டவில்லை. விவசாய கடன் பத்திரம் எனக் கூறிவிட்டார்கள். வங்கிக்கு ஏன் இன்றளவும் கூட்டிச்செல்லவில்லை என கேட்டதற்கு எவ்வித பதிலும் கூறவில்லை. பின்னிட்டு, பிரதிவாதிக்கு சந்தேகம் ஏற்பட்டு விசாரித்ததில், 1-ம் பிரதிவாதியை ஏமாற்றிய விவரம் தெரியவந்தது. உடனே தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை கடந்த 10.02.2015-ல் ரத்து பத்திரம் எழுதி ரத்து செய்துவிட்டார். இன்றுவரை பிரதிவாதிகள்தான் சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் பொய்யான, மோசடியான ஆவணமாகும். தாவா சொத்தைப் பொறுத்து எவ்வித உரிமையும், பாத்தியமும் வாதிகளுக்கு இல்லை. பிரதிவாதியை ஏமாற்றி தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார்கள்.எனவே, வாதிகளின் வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:36:44 +0530

**4) 3-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**:

தாவா பொய்யானதும், மோசடியானதும் ஆகும். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 1-ம் பிரதிவாதியை ஏமாற்றி வாதிகள் தானசெட்டில்மெண்ட் பத்திரம் தயாரித்து கையொப்பம் பெற்று பதிவு செய்யதுவிட்டனர். மேற்படி விவரம் தெரிந்ததும், மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார்கள். 3-ம் பிரதிவாதியின் தகப்பனாரான 1-ம் பிரதிவாதி தெய்வபக்தியால், அறக்கட்டளை அமைக்கும் எண்ணம் இருந்தது. மேற்படி வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த பின்னிட்டு, கடந்த 26.03.2015-ல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய அறக்கட்டளை நிறுவி ஆவண எண்.10/2015 ஆக பதிவு செய்துள்ளார். 1-ம் பிரதிவாதி செயலாளர், 3-ம் பிரதிவாதியின் மகள் செயலாளர் மற்றும் அறங்காவலர் பொறுப்பிலும், துணைதலைவர் மற்றும் பொறுப்பாளராக மாரப்பன், பொருளாளராக ரங்கசாமியும், துணை செயலாளராக கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அறக்கட்டளைப் பொறுத்து 1-ம் பிரதிவாதி உயில் சாசனம் ஆவண எண்.69/2015 ஆக கடந்த 15.07.2015-ல் செயலாளர் மற்றும் அறங்காவலரான எஸ்.கீர்த்தனா பெயரில் ஏற்படுத்தியுள்ளார். பின்னிட்டு 1-ம் பிரதிவாதி காலமாகிவிட்டார். மேற்படி உயில்சாசனத்தின்படி அறக்கட்டளை இன்றளவும் செயல்பட்டு வருகிறது. மேற்படி உறுப்பினர்களை தவிர, வேறு யாருக்கும் உரிமை கிடையாது. இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிகளுக்கு எவ்வித வழக்குமூலமும் கிடையாது. எனவே, வாதிகளின் வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**5) எழுவினாக்கள்**:-

வாதியின் திருத்தப்பட்ட வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்து கீழ்கண்ட எழுவினாக்கள் 18.01.2016-ல் வனையப்பட்டுள்ளது.


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:36:51 +0530

1. **Whether the settlement cancellation deed dated 10.02.2015 is valid and bind the plaintiffs ?**
2. **Whether the plaintiffs are entitled to the relief of declaration as prayed for ?**
3. **Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for ?**
4. **To what other relief ?**

6) வாதிகள் தரப்பில், 1-ம் வாதி **வா.சா.1** ஆகவும், 2, 3, 4-ம் பிரதிவாதிகள் முறையே **பி.வா.சா.1, பி.வா.சா.2** மற்றும் **பி.வா.சா.3** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இந்நிலையில் வாதிகளும், பிரதிவாதிகளும் கடந்த 04.03.2026-ல் நீதிமன்றத்தில் ஆஜராகி, சமரச குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள். சமரச குறிப்பாணை அடிப்படையில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு இருதரப்பிலும் கேட்கப்பட்டது.

7) அசல் வழக்கானது கடந்த 10.02.2015-ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் ஆவண எண்.652/2015 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யக் கோரியும், தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் விற்பனையோ, வில்லங்கமோ செய்யாதிருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, இருதரப்பு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில், வாதிகளும், பிரதிவாதிகளும் சமரசம் செய்து கொண்டதாக இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இருதரப்பினர்களும் சமரச குறிப்பாணையை தாக்கல் செய்துள்ளனர். திறந்த நீதிமன்றத்தில் படித்து காண்பிக்கப்பட்டு, இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**8) இருதரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட சமரச குறிப்பாணையின் ஷரத்துக்கள் பின்வருமாறு:**


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:36:57 +0530

**8.1)** 1-ம் பிரதிவாதி கடந்த 10.02.2015-ம் தேதியன்று தன்னிச்சையாக ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் ரத்து பத்திர எண்.652/2015 செல்லத்தக்கதல்ல என்பதனை 2 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**8.2)** 1-ம் பிரதிவாதி கடந்த 14.05.2014-ம் தேதியன்று வாதிகளுக்கு ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவண எண்.2085/2014-ன் படியும், வழக்கு சொத்துக்கள் வாதிகளின் சுவாதீனத்தில் உள்ளதின் அடிப்படையிலும் வாதிகள் வழக்கு சொத்துக்களின் முழு உரிமையாளர்கள் என்பதனை 2 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**8.3)** இந்த மனுவில் இதர சொத்து விபரத்தில் விவரித்துள்ள அயிட்டம் 1 முதல் 3 வரை குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் 4-ம் பிரதிவாதி ரங்கநாதன் சர்வ சுதந்திரமாக அடைந்து கொள்ளவேண்டியது.

**8.4)** இந்த மனுவில் இதர சொத்து விவரத்தில் விவரித்துள்ள அயிட்டம் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை 2-ம் பிரதிவாதி தனலட்சுமி உயிர் உள்ளவரை ஆண்டு அனுபவித்து, அவர் ஆயுளுக்கு பின்னிட்டு 3-ம் பிரதிவாதி சாமிநாதன் சர்வ சுதந்திரமாக அடைந்து கொள்ளவேண்டியது.

**8.5)** உபயவாதிகளுக்கு இந்த மனுவில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து ஒருவர் மற்றொருவர் மீது எக்காலத்திலும் எந்தவித உரிமைகளையும் கோருவதில்லை என்று உறுதி கூறுகிறார்கள்.

## வழக்கு சொத்து விவரம்

**வாதிகள் கலைவாணி, கௌசல்யா ஆகிய இருவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து:**

கோபி ரிடி, புளியம்பட்டி சப்ரிடி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பனையம்பள்ளி கிராமம், புதிய க.ச.எண். 543/1,


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:37:05 +0530

நெ.பு.ஹெ.1.12.5 க்கு பு.ஏ.2.78 (பட்டா எண் 1400) இதில் சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கும் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொது கிணற்றிற்காக விடப்பட்ட பு.ஏ.0.17 செண்ட் பூமிக்கும் தெற்கு, சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பு.ஏ.0.50 செண்ட் பூமிக்கும் வடக்கு, க.ச.எண்.543/2 நெ காலை பூமிக்கும் (மேற்கு), சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கும், பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட தென்வடல் பொது வாய்க்கால் உத்திக்கும் கிழக்கு, இதன் மத்தியில் பு.ஏ.0.35 செண்ட் அளவுள்ள புன்செய் பூமி ஒரு தாக்கும்.

பின்னும் மேற்படி கிராமம், ரீசர்வே எண்.543/1 நெ காலையில் க.ச.எண்.550, 548 நெ காலைகளுக்கும் வடக்கு, பொது உத்தி வாய்க்காலுக்கும் மேபுறமுள்ள சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட புன்செய் ஏக்கர் 0.50 செண்ட் பூமிக்கும் தெற்கு, சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பு.ஏ.0.90 செண்ட் பூமிக்கும் மேற்கு, க.ச.எண்.550, 542 நெ காலைகளுக்கும் கிழக்கு, இதன் மத்தியில் பு.ஏ.0.54 செண்ட் அளவுள்ள புன்செய் பூமி இரண்டாம் தாக்கும்.

பின்னும் மேற்படி காலையிலேயே கிணர், வாரி இவைகளுக்கு விடப்பட்ட வடகோட்டில் க.ச.எண். 534 நெ காலைக்கும் கிழக்கும், தெற்கும், இன்று உங்களுக்கு தானம் கொடுத்த பூமிக்கும், பொது உத்தி வாய்க்காலுக்கும் வடக்கு, க.ச.எண்.543/2 காலை பூமிக்கும் மேற்கு, இதன் மத்தியில் கிணற்றிற்காக விடப்பட்ட பு.ஏ.0.17 செண்டில் பொதுவில் சரிபாதி பு.ஏ.0.08 1/2 செண்ட் அளவுள்ள புன்செய் பூமி 3-ம் தாக்கும்,

பின்னும் மேற்படி காலையிலேயே சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் வடக்கு, சாமிநாதன் மற்றும் ரங்கநாதன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் தெற்கு, க.ச.எண்.542 நெ காலை பூமிக்கும் கிழக்கு, பொது வாய்க்கால் உத்திக்கும்


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:37:11 +0530

மேற்கு, இதன் மத்தியில் பொது வண்டித்தடத்திற்காக விடப்பட்ட பு.ஏ.0.02 செண்டில் பொதுவில் பு.ஏ.0.01 செண்ட் அளவுள்ள பூமி நான்காம் தாக்கும்,

பின்னும், மேற்படி காலையிலேயே பொது வாய்க்கால் உத்தி இவைகளுக்காக விடப்பட்ட பு.ஏ.0.03 செண்டில் பொதுவில் பு.ஏ.0.01 1/2 செண்ட் அளவுள்ள பூமி ஐந்தாம் தாக்கும் ஆக மொத்தம் ஐந்து தாக்குகளும்,

பின்னும் மேற்படி பனையம்பள்ளி கிராமம், கஸ்பா, ஊர் நத்தம் 594/3 (இதன் தற்போதைய புதிய புல எண்.728/1) நெ பு.ஹெக்.0.00.94 இதில் பவானிசாகர் செல்லும் தென்வடல் ரோட்டிற்கும் கிழக்கு, மாகாளி முதலியார் வீட்டிற்கும் மேற்கு, நத்தத்தில் உள்ள பஞ்சாயத்து ரோட்டிற்கும் தெற்கு, ஆறுமுகம் வீட்டிற்கும் வடக்கு, இதன் மத்தியில் தென்வடல் இருபுறமும் 40 அடி, கிழமேல் வடபுறம் 28 அடி, கிழமேல் தென்புறம் 24 அடி, இந்தளவுள்ள 1040 சதுரடிக்கு 96.62 சதுர மீட்டர் விஸ்தீரணம் கொண்ட இடமும், மேற்படி இடத்தில் 17x20 க்கா உள்ள 340 சதுரடிக்கு 31.59 சதுரமீட்டர் அளவில் மேற்கு பார்த்து கட்டப்பட்டுள்ள RCC வீடு ஒன்றும், மேற்படி வீட்டிற்குண்டான கதவு, நிலவு, கட்டுக்கோப்புகள், முன்பின் வாசல், அடிநிலம் சகிதம் பூராவும். மேற்படி இடத்தில் 20x20 க்காக உள்ள 400 சதுரடிக்கு 37.16 சதுரமீட்டர் அளவில் மேற்கு பார்த்து கட்டப்பட்டுள்ள வீடு ஒன்றும், மேற்படி வீட்டிற்குண்டான கதவு, நிலவு, கட்டுக்கோப்புகள், முன்பின் வாசல் அடிநிலம் சகிதம் பூராவும்.

மேற்படி வீடுகளுக்கு பெறப்பட்டுள்ள மின் இணைப்பு S.C.No.360-006-67, 360-006-87, 360-006-213, 360-006-288 சர்வீஸ் காப்புத்தொகை உபகரண வசதிகள் பூராவும், மேற்படி வீட்டிற்குண்டான குடிநீர் இணைப்பு வசதிகள் மற்றும் அதன் காப்புத்தொகை உபகரண வசதிகள் பூராவும், மேற்படி வீட்டின் கதவு எண்.2/116. மேற்படி பூமிகளுக்கும் மற்றும் வீடுகளுக்கும் எப்போதும் போல் போகவர உண்டான மாமூல் வழிநடை, வண்டித்தட


SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:37:18 +0530

பாத்தியங்கள் சகிதம் பூராவும்.

**இதர சொத்து விவரம்**

**4-ம் பிரதிவாதி ரங்கநாதனுக்கு பாத்தியமாகும் அயிட்டம்-1 சொத்து:**

கோபி ரிடி, புளியம்பட்டி சப்ரிடி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பனையம்பள்ளி கிராமம், பழைய க.ச.எண்.44, புதிய க.ச.எண்.550/2, பு.ஹெக்.0.56.00 (பு.ஏக்கர் 1.38 1/2) இதில் பு.ஏக்கர் 68 1/2 பூமிக்கு செக்குபந்தி விவரம்,

க.ச.எண்.550/3 பூமியில் உள்ள மனையிடங்களுக்கு --- வடக்கு,

க.ச.எண்.550/2-ல் கலைவாணிக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் மற்றும்

543/1 காலை பூமிக்கும் --- தெற்கு,

க.ச.எண்.548 க்கும் --- மேற்கு,

க.ச.எண்.550/2-ல் உள்ள தென்வடல் வண்டித்தடத்துக்கும் --- கிழக்கு,

இதன் மத்தியில் பு.ஏ.0.68 1/2 செண்ட் அளவுள்ள புன்செய் பூமி பூராவும். மேற்படி பூமியிலுள்ள தோட்ட சாலை மற்றும் மேற்படி சாலைக்கு பெறப்பட்டுள்ள மின் இணைப்பு S.C.No.04-360-006-945 சர்வீஸ் காப்புத்தொகை உபகரண வசதிகள் பூராவும்,

**4-ம் பிரதிவாதி ரங்கநாதனுக்கு பாத்தியமாகும் அயிட்டம்-2 சொத்து :-**

கோபி ரிடி, புளியம்பட்டி சப்ரிடி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பனையம்பள்ளி கிராமம், புதிய க.ச.எண்.542/2A பு.ஹெக்.0.07.20 (பு.ஏக்கர் 0.17 3/4) பூமிக்கு செக்குபந்தி விவரம்.

க.ச.எண்.542/2B பூமிக்கும் ---- வடக்கு,

க.ச.எண்.534 பூமிக்கும் ---- தெற்கு,

க.ச.எண்.543/1 பூமிக்கும் ---- மேற்கு,



SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:37:25 +0530

க.ச.எண்.542/6, 542/3 பூமிகளுக்கும் --- கிழக்கு

இதன் மத்தியில் பு.ஏ.0.17 3/4 செண்ட் அளவுள்ள புன்செய் பூமி பூராவும்.

**4-ம் பிரதிவாதி ரங்கநாதனுக்கு பாத்தியமாகும் அயிட்டம்-3 சொத்து:-**

கோபி ரிடி, புளியம்பட்டி சப்ரிடி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பனையம்பள்ளி கிராமம், புதிய க.ச.எண்.542/2B பு.ஹெக்.0.01.80 (பு.ஏக்கர் 0.04 1/2) பூமிக்கு செக்குபந்தி விவரம்.

க.ச.எண்.543/1 பூமிக்கும் ---- வடக்கு,

க.ச.எண்.542/6-ல் வேலுமணி அவர்களுக்கு

பாத்தியப்பட்ட பூமிக்கும் ---- தெற்கு,

க.ச.எண்.542/2A பூமிக்கும் ---- மேற்கு,

இதன் மத்தியில் பு.ஏ.0.04 1/2 செண்ட் அளவுள்ள முக்கோண வடிவ புன்செய் பூமியும் பூராவும்.

**3-ம் பிரதிவாதி சாமிநாதனுக்கு பாத்தியமாகும் அயிட்டம்-4 சொத்து (இது 2-ம் பிரதிவாதி தனலட்சுமி காலத்திற்கு பின்னிட்டு அமலுக்கு வரத்தக்கது)**

கோபிசெட்டிபாளையம் ரிடி, புஞ்சைபுளியம்பட்டி சப்ரிடி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, தாகூர் வீதி, புஞ்சைபுளியம்பட்டி கிராம நத்தம் நிலவரித் திட்ட பட்டா எண்.2273, நத்தம் பழைய புல எண்.104/79 இதன் தற்கால புல எண்.104/79 ஏ, பு.ஹெ.0.02.0 க்கு 200 சதுரமீட்டருக்கு 2153 சதுரடி அளவுள்ள காலி இடத்திற்கு செக்குபந்தியும் அளவுகளும்,

குமரன் தெருவிற்கும் ---- வடக்கு

தாகூர் வீதிக்கும் ---- தெற்கு

மாரிமுத்து வீட்டிற்கும் ---- கிழக்கு



SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.03.10 13:37:33 +0530

அண்ணாமலையார் கோயிலுக்கு பாத்தியப்பட்ட

இடத்திற்கும் ---- மேற்கு

இதன் மத்தியில்,

கிழமேல் வடபுறம் 12.4 மீட்டர், கிழமேல் தென்புறம் 120 மீட்டர், தென்வடல் கிழபுறம் 16.4 மீட்டர் தென்வடல் மேபுறம் 170 மீட்டர், ஆக இன்ஜினியர் அளவுப்படி 200 சதுரமீட்டருக்கு 2153 சதுரடி அளவுள்ள காலியிடம்

மேற்படி இடத்தில், தென்வடல் மேபுறம் 55 அடி, தென்வடல் கிழபுறம் 18 அடியிலிருந்து வடபுறமாக சென்று மேபுறமாக 11 அடி வரை சென்று பின்பு தெற்கிலிருந்து வடக்காக 33 1/2 அடி வரை உள்ளதும்.

கிழமேல் வடபுறம் 11 அடி கிழமேல் தென்புறம் 23 அடி ஆக இன்ஜினியர் அளவுப்படி 818 சதுரடி அளவில் வடக்கு மற்றும் கிழக்கு பார்த்து கட்டப்பட்டுள்ள ஓட்டுவில்லை வீடு ஒன்று பூராவும்.

மேற்படி வீட்டிற்கு கிழபுறமாக

தென்வடல் இருபுறமும் 42 அடி கிழமேல் இருபுறமும் 11 அடி ஆக இன்ஜினியர் அளவுப்படி 462 சதுரடி அளவில் வடக்கு மற்றும் மேற்கு பார்த்து கட்டப்பட்டுள்ள ஓட்டுவில்லை வீடு ஒன்று பூராவும்,

ஆக 1280 சதுரடிக்கு 118.91 சதுர மீட்டர் அளவுள்ள மேற்படி இரண்டு வீடுகள் பூராவும், மேற்படி வீடுகளுக்குண்டான புஞ்சைபுளியம்பட்டி நகராட்சியின் சொத்து வரி விதிப்பு எண்கள்.060/005/00121, 060/005/00122 குழாய் வரி விதிப்பு எண்.060/005/00028 மேலும், மேற்படி வீடுகளுக்கு பெறப்பட்டுள்ள மின் இணைப்பு எண்கள் 04-358-013-158, 04-358-013-568, 04-358-013-1114 மேற்படி குழாய் இணைப்பு மற்றும் மேற்படி மின் இணைப்புகள்


SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 13:37:42 +0530

ஆகியவைகளுக்குரிய சகல செக்யூரிட்டி டெபாசிட் வகையறாவிலும் முழு பாத்திய சகிதமும். மேற்படி வீடுகளுக்குண்டான கதவு எண்கள்.58, 50 மேற்படி வீடுகள் கட்டி 20 ஆண்டுகளாகிறது.

மேற்படி வீடுகளுக்கு எப்போதும் போல் மாமூலாக போக வரவும், வண்டி வாகனங்கள் போக வரவும், எப்போதும் போல் மாமூலாக உள்ள புழங்குரிமை மற்றும் வசதியுரிமை பாத்தியங்கள் சகிதமும்.

**9. இறுதியாக,**

**i) அசல் வழக்கு முழுவதுமாக அனுமதிக்கப்படுகிறது. கடந்த 10.02.2015-ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் ஆவண எண்.652/2015 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ii) தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் விற்பனையோ, வில்லங்கமோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இவ்வழக்கின் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர், என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 13:37:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சத்தியமங்கலம்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| வாசா.1 | - | கலைவாணி | (1-ம் வாதி) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** : -

| | | | |
|---|---|---|---|
| பிவா.சா.1 | - | தனலட்சுமி | (2-ம் பிரதிவாதி) |
| பிவா.சா.2 | - | சாமிநாதன் | (3-ம் பிரதிவாதி) |
| பிவா.சா.3 | - | ரங்கநாதன் | (4-ம் பிரதிவாதி) |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>** - **- இல்லை -**

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>** - **- இல்லை-**

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 13:37:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**அசல் / வரைவு தீர்ப்புரை**

**அ.வ.எண்.149 / 2015**

**தேதி : 10 / 03 / 2026**

**ம.உ.நீ.ம.சத்தியமங்கலம்**